# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.269/2022

| பெயர் | | திரு. முருகேசன் | ஊர் | : | மூக்கப்புடையான்பள்ளம் |
|---|---|---|---|---|---|
| த.பெ. | : | திரு.ஜெயராசு | மாவட்டம் | : | புதுகோட்டை |
| வயது | : | 42 | தொழில் | : | **விவசாயம்** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-12ஆம் நாள் **வா.சா. 1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 22.10.1990 தேதியிட்ட 2ஆம் பிரதிவாதி மணி என்பவருக்கு ஆதரவாக நிறைவேற்றிய கிரைய பத்திரம் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 9.12.2002 தேதியிட்ட மணி மற்றும் தனலட்சுமி ஆகியோர் 1ஆம் வாதிக்கு ஆதரவாக நிறைவேற்றிய கிரைய பத்திரம் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். 16.3.2013 தேதியிட்ட வாதியால் கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்த ஆட்சேபணை மனு அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 19.10.2006 தேதியிட்ட தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண் 346/2004 தேதியிட்ட முதல் நிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 29.11.2011 தேதியிட்ட தஞ்சாவூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 346/2004 இறுதிநிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். கணினி பட்டா கணினி நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.6** ஆகும். அடங்கல்

உண்மை நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.7** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மேலும் முதல்விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.12 16:41:38 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**